

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION
Rs.120/-



# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY

| | | | |
|---|---|---|---|
| கதிர் 49 | பாரிப்பு 7 | திருவள்ளுவர் ஆண்டு 2048 | மார்ச் 2018 |
| KADHIR 49 | PAARIPPU 7 | THIRUVALLUVAR AANDU 2048 | MARCH - 2018 |




நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org email id : tneapwd@yahoo.co.in

# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்








## பொதுச் செயலாளர் மடல்

மடல் - 7 (2017 - 2018)

# தொடரும்
## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வில் சிக்கல்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நமது சகோதர சங்கம் நம் உறுப்பினர்களில் ஒரு சாராருக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கக் கூடாது என வலியுறுத்தி வருகிறது. நம் உறுப்பினர்களில் தகுதியுள்ள அனைவரையும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் சேர்க்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்திவருகிறோம்.

மத்திய அரசின் ஏழாவது சம்பள கமிஷன் அடிப்படையில் தமிழக அரசு அமைத்த அலுவல்குழு (Official Committee) பரிந்துரைகளில் முரண்பாடுகள் உள்ளதாக பல்வேறு சங்கங்கள் முறையிட்டதின் பேரில், இதை ஆராய்வதற்காக திரு. M.A. சித்திக் ஐ.ஏ.எஸ் அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. இந்த ஒரு நபர் குழு ஏற்கனவே பல்வேறு சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆராய்ந்து ஆறு மாதங்களுக்குள் தன் பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு, அரசு ஊழியர்களுக்கு செலவாகும் செலவினத்தை குறைப்பதற்காக, தேவையற்ற பதவிகளை அடையாளம் கண்டு அந்த பதவிகளை ஒழிப்பது, சில பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் (Contract basis) பணி அமர்த்துவது, புதிய பணிநியமனம், பதவி உயர்வு வழங்காமல் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தேவைக்கதிகமாக உள்ளவர்களை வேறு துறைக்கு மாற்றுவது போன்றவற்றை ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்

அதிகாரி திரு.S.ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் பணியாளர் சீரமைப்பு கமிட்டி (Staff Rationalisation Committee) அமைத்துள்ளது. இந்த கமிட்டியில் M.A.சித்திக் ஐ.ஏ.எஸ் அவர்களும் இடம் பெற்றுள்ளார். இந்த கமிட்டி தன் பரிந்துரைகளை ஆறு மாதத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**

**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588 / 988 444 98 97
**E.mail: d.murugavelsivan@gmail.com**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 98 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 28.02.2018)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | N. நமசிவாயம் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 2. | M. விஜயலெட்சுமி | உதவி செயற் பொறியாளர் |
| 3. | S. காமாட்சி | உதவி செயற் பொறியாளர் |
| 4. | A. இராமசுப்பு | உதவி செயற் பொறியாளர் |
| 5. | P. பாலகங்காதரன் | உதவி செயற் பொறியாளர் |
| 6. | M. திலகம் | தலைமை வரைதொழில் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்
அரசு முதன்மைச் செயலாளர்

# 03.02.2018 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 03.02.2018 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை பொறியியல் இல்லத்தில் மாநிலத் தலைவர் பொறியாளர் சி. கணபதி அவர்கள் தலைமையில், மாநில பொதுச் செயலாளர் த. முருகேசன் அவர்கள் முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். வேலூர் கிளையின் சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் V.படவேட்டான் அவர்களும், மையச் சங்கம் சார்பாக வடக்கு மண்டல செயலாளர் பொறியாளர் K.சேரலாதன் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் C.கணபதி அவர்கள் தன்னுடைய உரையில் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மாநில துணைத் தலைவர் பொறியாளர் S.லீலாவதி அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் வடக்கு மண்டல கிளைகளின் சார்பாக பொன்னாடைகள் அணிவித்து கௌரவித்தனர்.

சென்ற மையச்செயற்குழு கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்து அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் அவைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற்றார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் பொறியாளர்கள் T.ரவிச்சந்திரன் பொருளாளர் திண்டுக்கல் கிளை, V.சிவப்பிரகாசம் பொருளாளர் தஞ்சாவூர் கிளை, V.ராமகிருஷ்ணன் பொருளாளர் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை, N.முருகேசன் துணைத்தலைவர் திருச்சி கிளை, G.அண்ணாமலை செயலாளர் புதுக்கோட்டை கிளை, D.சந்திரன் உறுப்பினர் வேலூர் கிளை, K.சேரலாதன் வடக்கு மண்டல செயலாளர், K.R.ஜெயராமன் செயலாளர் திருச்சி கிளை, R. வெங்கடேசபாபு செயலாளர் வேலூர் கிளை, C.பன்னீர் செல்வம் பொருளாளர் சேலம் கிளை, மூத்தப் பொறியாளர்கள் R.வெங்கடசுப்பு, C.P.சண்முகம், T.P.பாலசுப்ரமணியம், G.பாலசுப்ரமணியம், N.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் விரிவான விளக்கம் அளித்தார்.

நிதிச்செயலாளர் பொறியாளர் K.கமால்தீன் அவர்கள் 01.08.2017 முதல் 31.12.2017 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெற்றார்.

பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் N. புண்ணியகோட்டி அவர்கள் 01.08.2017 முதல் 31.12.2017 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

தணிக்கையாளர்களாக சேலம் கிளை பொருளாளர் C.பன்னீர் செல்வம் மற்றும் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை பொருளாளர் V.ராமகிருஷ்ணன் அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

வெளியீட்டுச்செயலாளர் பொறியாளர் S.K. கருப்புச்சாமி அவர்கள் பொறியியல் கதிர், நாட்காட்டி, நாட்சுவடி, குறித்து உரையாற்றினார். அதை தொடர்ந்து மண்டல செயலாளர்கள் பொறியாளர்கள் P.நடராஜன் மேற்கு மண்டல செயலாளர், K.சேரலாதன் வடக்கு மண்டல செயலாளர், S. எட்வின்ஜெயராஜ் தெற்கு மண்டல செயலாளர் ஆகியோர் கிளைச்சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

சென்னை பொறியியல் இல்லம் பராமரிப்பு குறித்து இல்லக் காப்பாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் உரையாற்றினார்.

கோயம்புத்தூர் பொறியியல் இல்லம் குறித்து செயலாளர் பொறியாளர் K.N.ரஞ்சன் அவர்கள் உரையாற்றினார்.

அடுத்த மாநில செயற்குழுக் கூட்டம் கிழக்கு மண்டலத்தின் சார்பாக நடத்துவது எனவும் இடம், தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வேலூர் கிளையின் சார்பாக கிளைச் செயலாளர் பொறியாளர் R. வெங்கடேசபாபு அவர்களும் மையச்சங்கத்தின் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்களும் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மையச் செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக (தவறாக ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து) பதவி பெயர் மாற்றம் செய்தது சம்பந்தமாக அரசிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. இந்த கோப்பு அரசிடம் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளது. இந்த கோப்பு 20.02.2018க்குள் முடிவுக்கு வரவில்லையென்றால் வழக்கு தொடர்வது என தீர்மானிக்கப்படுகிறது.

2. பொதுப்பணித்துறையில் நிர்வாகம் மேம்பட தமிழ்நாடு பொறியியல் பணிவிதிகளில் (Tamilnadu Engineering Service Rules) உள்ளது போல், மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல், மத்திய அரசில் உள்ளது போல் ஏற்கனவே தமிழக பொதுப்பணித்துறையில் கடைபிடித்தது போல் உதவி செயற்பொறியாளர் (Assistant Executive Engineer) பதவிகளை நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்ய வேண்டுகிறோம்.

3. விதிகளில் உள்ளது போல் உதவி செயற்பொறியாளர் பதவியை நேரடி நியமனம் மூலம் நிரப்ப வலியுறுத்தி வழக்கு தொடர்வது என தீர்மானிக்கப்படுகிறது.

4. நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள விதித்திருத்த கோப்புகளை விரைந்து முடிக்க அரசை வலியுறுத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

5. பட்டயம் முடித்த பணிஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

6. பட்டயம் முடித்த பணிஆய்வாளர்களுக்கு வரைவாளர் பதவி உயர்வு அளிக்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

7. 1986 ஆம் ஆண்டு முதல் வரைவாளர், பாசன ஆய்வாளர் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளது. எனவே மேற்கண்ட பதவிகளை நிரப்ப வலியுறுத்தி தீர்மானிக்கப்படுகிறது.

8. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு, நீர்வள ஆதாரத்துறை, கட்டிடப் பிரிவு என தனித்தனியாக காலி பணியிட மதிப்பீடு (Estimate of vacancies) தயாரித்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என வலியுறுத்தி தீர்மானிக்கப்படுகிறது.

9. அரசு ஆணை எண்.1க்கு விதித்திருத்தம் வழங்காமல் புதிதாக தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் உதவிப் பொறியாளர்களை தேர்வு செய்யக் கூடாது என தீர்மானிக்கப்படுகிறது.

10. பொங்கும் நிதி உறுப்பினர்கள் உடல் ஊனமடைந்தால் வழங்கப்படும் தொகை ரூ.15000/-லிருந்து ரூ.25000/- ஆக உயர்த்தி வழங்க தீர்மானிக்கப்படுகிறது.

## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்





## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்




தமிழ்நாடு பொறியியல் சங்கம் விருதுநகர் கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் A.இராமசுப்பு உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு விருதுநகர் கிளையின் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்







## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்









# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்













## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்













பெறுநர்,

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பணியமைப்பு- பொ.ப.து - தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி - அரசுஆணை 1/பொபது/பி2 நாள்: 02.01.1990 - தொழில் நுட்ப உதவியாளர் (சிவில்) பதவியிலிருந்து பணிமாற்றம் மூலம் உதவிப் பொறியாளர் (சிவில்) பதவியில் பணிநியமனம் செய்யப்பட்டு, அரசாணை எண் 155 / பொ.ப.து / பி2 /நாள். 13.08.2015ன் மூலம் பணிவரன் முறை செய்யப்பட்டவர்கள் - உச்சநீதி மன்ற தீர்ப்பை அமுல்படுத்தி உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கான பெயர் பட்டியலில் விதிகளுக்குட்பட்டு 75% ஒதுக்கீட்டிற்குள் சேர்க்க வேண்டுதல் -குறித்து.

பார்வை : - 1. அரசாணைஎண் 1 /பொ.ப.து/பி2/நாள். 2.01.1990.
2. அரசாணைஎண் 88 /பொ.ப.து/பி2/நாள். 22.01.1991.
3. அரசுகடிதஎண். 26642/பி2/2003-10/ பொபது/ நாள். 24.02.2006.
4. அரசாணை எண். 155 / பொ.ப.து / பி2 /நாள். 13.08.2015.
5. முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து. பொ.ப.து. மற்றும் தலைமை பொறியாளர் (பொது) பொ.ப.து அவர்களின் கடிதஎண். எஸ் 2(2)/59260/2015/நாள்.18.01.2017.
6. உச்சநீதிமன்ற வழக்குஎண். (SLP (Civil) No. 2495 of 2007) தற்போது CA No.995/2009, 997/ 2009 மற்றும் 998 /2009 மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள். 14.09.2017.
7. உச்சநீதி மன்ற மேல்முறையீட்டு மறுசீராய்வு மனு (Review Petition) (C) No. 2978/2017 in CA No. 995/2009 மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள்: 23.01.2018.

கீழ்காணும் விவரங்களை தங்களின் பார்வைக்கும் உரிய நடவடிக்கைக்கும் சமர்ப்பிக்கின்றோம்.

பொதுப்பணித்துறையில் 1999 - 2000 மற்றும் 2001-2002-ஆம் ஆண்டுகளில் பணிமாற்றத்திற்கு ஒதுக்கப்பட்ட 122 உதவிப் பொறியாளர் காலியிடங்களில், 29 காலியிடங்கள் மட்டும் வரைதொழில் அலுவலர்கள், இளநிலை வரைதொழில் அலுவலர்கள் மற்றும் ஓவர்சியர்களை வைத்து நிரப்பப்பட்டு, மீதம் 93 உதவிப் பொறியாளர்கள் காலியிடம் நிரப்பப்படாமல் இருந்தது. அந்த காலியிடத்தில் GO.MS

No.I/பொ.ப.து/நாள். 2.01.1990ல் வழங்கப்பட்ட உத்தரவுகளின் படியும் மற்றும் அரசுக் கடிதம் எண். 26642/பி2/2003-10/பொபது/நாள். 24.02.2006ன் வாயிலாக பொறியியல் பட்டம் பெற்று 5 வருட அனுபவம் பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்களை (53 நபர்கள்) உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கைக்குள் அரசுக் கடிதம் வெளியான 24.02.2006 அன்று முன்தேதியிட்டு உதவிப்பொறியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டது.

பின்பு G.O. MS.No.155 /பொ.ப.து/பி2/நாள் 13.08.2015 மூலம் பணிவரன்முறை செய்யப்பட்டு, 18.01.2017 அன்று முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது அவர்கள் மூலம் முதுநிலைப் பட்டியல் தயார் செய்து வெளியிடப்பட்டது. மேலும் மேற்கண்ட 53 உதவிப் பொறியாளர்கள் தேர்வுநிலை பெற்று தற்போது பணிபுரிந்து வருகிறார்கள்.

24.02.2006ம் தேதியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்ட இவர்களுக்கு பின்னால் 2007ஆம் ஆண்டு TNPSC மூலம் நேரடி நியமனம் செய்யப்பட்ட சில உதவிப் பொறியாளர்கள், GO.MS No.I/பொ.ப.து/நாள். 2.01.1990ன் மூலம் நியமனம் செய்யப்பட்ட189 உதவிப் பொறியாளர்களின் (வரைதொழில் அலுவலர்கள், இளநிலை வரைதொழில் அலுவலர்கள், ஓவர்சியர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள்) முதுநிலைப்பட்டியலை எதிர்த்து கீழ்க்கண்ட வழக்குகள் தொடர்ந்தார்கள். அனைத்து வழக்குகளும் வழக்கு எண். WP. No. 3617/2017ல் ஒருங்கிணைக்கப்பட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

வழக்கு எண்கள்.

| | | |
|---|---|---|
| 1) WP/36614/2016 | 2)WP/43750/2016 | 3)WP/3617/2017 |
| 4) WP/8402/2017 | 5)WP/10117/2017 | 6)WP (MD)6791/2017 |

19.04.2017ல் வழங்கப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற Bench வழக்கு எண். WA. 373/2017 தீர்ப்பில் இடைக்கால தீர்ப்பாக தற்போதுள்ள நிலை (Status quo to be maintained) நீடிக்க வேண்டுமெனவும் WP. No. 3617/2017 வழக்கை மூன்று மாத காலத்திற்குள் முடித்திட ஒற்றை நீதிபதி அமர்வுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. இந்த Status quo to be maintained மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் இருவருக்கும் பொருந்தும். மேற்கண்ட வழக்குகளுக்கு அரசு தரப்பில் உரிய எதிர் வாதுரை நீதிமன்றத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது பார்வை 3ல் காணும் உச்சநீதிமன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகள் CA.No.995/2009, 997/2009 மற்றும் 998/ 2009 ஆகிய மூன்று வழக்குகளும் 14.09.2017 நாளிட்ட தீர்ப்பில் தள்ளுபடி செய்யப்பட்டு, G.O.1க்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (சென்னை உயர்நீதி மன்ற Bench வழக்கு எண். WP. No. 7523/1997 தீர்ப்பு நாள்: 06.11.2006 க்கு எதிராக பொறியாளர் சங்கத்தால் உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.)

அதன் தொடர்ச்சியாக உச்சநீதிமன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். IA / 2017 in CA 995/2009 Clarification Petitionல், 1999-2000 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளில் GO.MS No.I/பொ.ப.து/ நாள். 02.01.1990 ன் மூலம் பணிமாற்றத்திற்கு ஒதுக்கப்பட்ட 93 உதவிபொறியாளர் காலியிடத்தில் தொழில்நுட்ப உதவியாளர் (53 நபர்கள்) வைத்து நிரப்பப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு Clarification Petition Admission நிலையிலே தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

மேலும் உச்ச நீதி மன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட மறுசீராய்வு மனு (Review Petition) (C) No.2978/2017 in CA. No.995/2009ம் தள்ளுபடி செய்யப்பட்டு, அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண். 1 நாள்-2.1.1990 அடிப்படையில் பணிமாற்றம் மூலம் நியமனம் செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு எதிராக உயர்நீதி மன்றம் முதல் உச்சநீதி மன்றம் (Review Petition) வரை தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்கிலும் அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது உயர்நீதி மன்றத்தில் உதவிப் பொறியாளர்களின் முதுநிலைப் பட்டியல் சம்பந்தமான 6 Writ Petition வழக்குகள் நிலுவையில் உள்ளது. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து அவர்கள் அரசு உரிமையியல் வழக்கறிஞருக்கு GO MS.No.155/பொ.ப.து/பி2/நாள் 13.08.2015ன் மூலம் பணிவரன்முறை செய்யப்பட்ட 53 உதவிப் பொறியாளர்களை (முதுநிலை வரிசை எண்.36(1) முதல் 36 (53) வரை) நிறுத்தி வைத்து விட்டு, உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க பரிசீலிக்கலாமா என சட்ட ஆலோசனை (Legal opinion) கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் உச்சநீதி மன்ற தீர்ப்பை அமுல்படுத்தி 75% உதவி செயற்பொறியாளர் பதவிக்கான காலியிடங்களுக்கு பணி மாற்றம் மூலம் உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ள வரைதொழில் அலுவலர், இளநிலை வரைதொழில் அலுவலர் ஓவர்சீயர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் (முதுநிலை வரிசை எண். 36 (1) முதல் 36 (53) வரை) பார்வை எண்.5ல் காணும் கடிதத்தில் உள்ளபடி முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்ட முதுநிலைப்பட்டியலில் உள்ள எங்களது சங்க உறுப்பினர்கள் அனைவரையும் பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(கு. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

பெறுநர்,

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
சேப்பாக்கம், சென்னை - 5.

ஐயா,

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து. - பணிமாற்றம் (Recruitment by Transfer) மூலம் உதவிப்பொறியாளர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் முதுநிலையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் - மாண்புமிகு உச்சநீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் அரசு கூடுதல் எதிர்வாதுரை (Counter Affidavit) தாக்கல் செய்ய வேண்டுதல் - சம்மந்தமாக.

பார்வை :
1. அரசாணை எண் 1 /பொ.ப.து/பி2/நாள். 2.01.1990.
2. அரசு கடித எண். 26642/பி2/2003-10/ பொபது/ நாள். 24.02.2006.
3. உச்ச நீதிமன்ற வழக்கு எண். (SLP (Civil) No. 2495 of 2007) தற்போது CA No.995/2009, 997/ 2009 மற்றும் 998/2009 மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள்.14.09.2017.
4. உச்சநீதி மன்ற மேல்முறையீட்டு மறுசீராய்வு மனு (Review Petition) (C) No. 2978/2017 in CA No. 995/2009 மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள்: 23.01.2018.
5. தமிழ்நாடு பொறியியல் சங்க கடித எண். 6. மா.த/01-18 நாள்: 23.01.2018.
6. தமிழ்நாடு பொறியியல் சங்க கடித எண். 2. மா.த/02-18 நாள்: 09.02.2018.

பார்வை 6ல் கண்ட கடிதத்தின் பால் தங்களின் மேலான கவனம் கொண்டுவரப்படுகிறது. பொதுப்பணித்துறையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக 5 ஆண்டுகள் பணிபுரிந்து, பணிபுரியும் போதே பி.இ., பட்டம் பெற்றிருந்தும் அப்போதைய சூழலில் பார்வை 1ல் காணும் அரசாணை எண் 1க்கு விதித்திருத்தம் செய்யப்படாத நிலை இருந்ததால் இளம் பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டு, பின்னர் அரசாணை எண். 1 / பொபது/ நாள். 02.01.1990ன் அடிப்படையில் பார்வை 2ல் காணும் அரசு கடிதத்தில் உள்ள செயல்முறை ஆணையின் (Executive order) படி பணிமாற்றம் (Recruitment by Transfer) மூலம் 24.02.2006 அன்று முன்தேதியிட்டு உதவிப்பொறியாளராக பணியமர்த்தப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் பரிசாக வழங்கப்பட்ட அரசாணை எண். 155 பொதுப்பணித்துறை (பி2) நாள் 13.08.2015ன் படி பணிவரன்முறை செய்யப்பட்டனர்.

மேற்குறிப்பிட்ட அரசாணையை தொடர்ந்து விதிகளின் அடிப்படையில் உரிய முதுநிலை அளித்து, முதன்மைத் தலைமைப் பொறியாளர் அவர்களின் கடித எண்.எஸ்.2(2)/ 59620/ 2015/ நாள். 18.01.2017ன் படி திருத்திய முதுநிலைப்பட்டியல் வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணை எண். 1ன் மூலம் பணிமாற்றம் (Recruitment by Transfer) செய்யப்பட்ட 189 உதவிப்பொறியாளர்களுக்கான (வரைதொழில் அலுவலர்கள், இளநிலை வரைதொழில் அலுவலர்கள், ஓவர்சியர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள்) முதுநிலைப் பட்டியலை எதிர்த்து, 24.02.2006 அன்று பணிமாற்றம் மூலம் நியமனம் செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு, பின்னால் 2007ம் ஆண்டு TNPSC மூலம் நேரடி நியமனம் செய்யப்பட்ட சில உதவிப் பொறியாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர். அனைத்து வழக்குகளும் WP. No. 3617/2017ல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

வழக்கு எண்கள்.

1) WP/36614/2016
2) WP/43750/2016
3) WP/3617/2017
4) WP/8402/2017
5) WP/10117/2017
6) WP (MD)6791/2017

19.04.2017ல் வழங்கப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற Bench வழக்கு எண். WA. 373/2017 தீர்ப்பில் இடைக்கால தீர்ப்பாக தற்போதுள்ள நிலை (Status quo to be maintained) நீடிக்க வேண்டுமெனவும் WP. No. 3617/2017 வழக்கை மூன்று மாத காலத்திற்குள் முடித்திட ஒற்றை நீதிபதி அமர்வுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. இந்த Status quo to be maintained மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் இருவருக்கும் பொருந்தும். மேற்கண்ட வழக்குகளுக்கு அரசு தரப்பில் உரிய எதிர் வாதுரை நீதிமன்றத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது பார்வை 3ல் காணும் உச்சநீதிமன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகள் CA.No.995/2009, 997/2009 மற்றும் 998/ 2009 ஆகிய மூன்று வழக்குகளும் 14.09.2017 நாளிட்ட தீர்ப்பில் தள்ளுபடி செய்யப்பட்டு, G.O.1க்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (சென்னை உயர்நீதி மன்ற Bench வழக்கு எண். WP. No. 7523/1997 தீர்ப்பு நாள்; 06.11.2006 க்கு எதிராக பொறியாளர் சங்கத்தால் உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது..)

மேலும் உச்சநீதிமன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட மேல் முறையீட்டு வழக்கு எண் IA/2017 in CA No.995/2009 Clarification petitionல் 1999 - 2000 மற்றும் 2001 - 2002 ஆம் ஆண்டுகளில் அரசாணை எண். 1 நாள். 2.1.1990ன் மூலம் பணிமாற்றத்திற்கு (Recruitment by Transfer) ஒதுக்கப்பட்ட 93 உதவிப் பொறியாளர் காலியிடத்தில் தொழில்நுட்ப உதவியாளர் மூலம் நிரப்பப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட தெளிவுரைக்கான மனுவும் (Clarification Petition) தள்ளுபடி செய்யப்பட்டது.

மேலும் உச்ச நீதி மன்றத்தில் பொறியாளர் சங்கத்தின் மூலம் தொடரப்பட்ட மறுசீராய்வு மனு (Review Petition) (C) No.2978/2017 in CA. No.995/2009ம் தள்ளுபடி செய்யப்பட்டு, அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண். 1 நாள்.2.1.1990 அடிப்படையில் உதவிப் பொறியாளர் நியமனம் செய்யப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட உயர்நீதி மன்றம் முதல் உச்சநீதி மன்றம் (Review Petition) வரை உள்ள அனைத்து வழக்கிலும் அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, உச்சநீதிமன்ற தீர்ப்பு, தெளிவுரைக்கான மனு மற்றும் மறுசீராய்வு மனு தள்ளுபடி ஆகியவற்றை மேற்கோள்காட்டி அரசு தரப்பில் உரிய கூடுதல் எதிர்வாதுரை தாக்கல் செய்து நீதியை நிலை நாட்ட துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தற்போதுள்ள உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான முதுநிலைப் பட்டியலில் உள்ள சிலர் ஓய்வு பெற்றும் ஒரு சிலர் ஓய்வு பெறும் நிலையில் உள்ளதாலும், உதவிப் பொறியாளர் முதுநிலை சம்பந்தமான அனைத்து வழக்குகளையும் தள்ளுபடி செய்ய, கூடுதல் எதிர்வாதுரை (Additional Counter Affidavit)அனுப்பி வைத்து நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை - 5.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் உறுப்பினர் பொறியாளர் P.B.மோகன் கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் ரூ.1120/- (ஆயிரத்து நூற்றி இருபது மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் தலைவர் பொறியாளர் K.மெய்யழகன் இளம் பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்திற்காக ரூ.2000/- (இரண்டாயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் R.சௌந்தரராஜன் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு)அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் வடக்கு மண்டல செயலாளர் பொறியாளர் B. நாகலிங்கம் உதவிசெயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1650/- (ஆயிரத்து ஆறுநூற்றி ஐம்பது மட்டும்) கடலூர் கிளைச் சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

**ABSTRACT**

Constitution of Staff Rationalisation Committee – Appointment of Chairman and Terms of Reference – Orders – Issued.

**Finance (CMPC) Department**

**G.O.Ms.No.56** **Dated:19-02-2018,**
**Hevilampi, Maasi-07,**
**Thiruvalluvar Aandu, 2049.**

**ORDER:**

The Official Committee, 2017 constituted to make necessary recommendations on revision of scales of pay and allowances for State Government Employees and Teachers including employees of Local Bodies has inter-alia recommended to constitute a Staff Rationalisation Committee to evaluate the staff structure in various Departments and identify non-essential posts so as to reduce the revenue expenditure and also identify the categories of posts which can be outsourced or appointed through contract appointment for an initial period as a measure to control expenditure.

2. After careful consideration, the Government has decided to constitute a Staff Rationalisation Committee. Accordingly, Government constitutes a "Staff Rationalisation Committee" duly chaired by **Thiru.S.Audiseshiah, IAS (Retd.),** former Principal Secretary to Government of Tamil Nadu.

3. Thiru.M.A.Siddique, I.A.S., Secretary (Expenditure), Finance Department shall be the Ex-officio Secretary to the Staff Rationalisation Committee. Orders in respect of the other supporting staff to the Committee shall be issued separately.

**TERMS OF REFERENCE:**

4. The following shall be the terms of reference for the Staff Rationalisation Committee:

i) To evaluate the staff structure in various departments and identify non-essential posts, so as to reduce the revenue expenditure and also identify the categories of posts which can be outsourced or appointed through contract appointment for an initial period as a measure to control expenditure.

ii) Consider any other relevant issue concerning administrative expenditure management in Government and Government agencies and make suitable recommendations.

5. The tenure of the Committee shall be for a period of six months from the date of constitution. The Committee shall submit its report to Government within the above period.

6. Other infrastructure requirements including computers will be made available by the Finance / Public Departments.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K. SHANMUGAM,**

**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.**

**FINANCE (PAY CELL) DEPARTMENT**

**G.O.Ms.No.57, Dated: 19th February, 2018**

(Heyvilambi, Maasi-7, Thiruvalluvar Aandu 2049)

**Tamil Nadu Revised Pay Rules, 2017**– Requests for rectification of pay anomalies – Constitution of One Man Committee – Orders –Issued.

**Read: -**

G.O.Ms.No.303, Finance (Pay Cell) Department, Dated: 11.10.2017.

**ORDER:-**

Based on the recommendations of the Official Committee, 2017, orders have been issued in the Government Order read above replacing the existing system of Pay Bands and Grade Pay applicable to State Government employees and teachers including employees of local bodies by new system of level based Pay Matrix in a manner similar to that adopted by the Government of India for its employees notionally with effect from 01.01.2016 and with monetary benefit from 01.10.2017. The above revision was adopted on the basis of corresponding pre-revised pay scales and inspite of the immense fiscal stress, keeping the welfare of the Government employees in mind, Government implemented the pay revision on the basis of the recommendations of Official Committee, 2017 at an additional cost of Rs.14,719/- Crore per annum.

2) Representations are now being received from various Employees Associations seeking revision of pay levels and rectification of pay anomalies. The Hon'ble His Excellency of Governor of Tamil Nadu in his address in Tamil Nadu Legislative Assembly on 08.01.2018 has made an announcement to the effect that the Government will constitute a Committee to examine these representations.

3) After careful consideration, the Government has decided to constitute a One Man Committee to rectify the pay anomalies. Accordingly, Government direct that One Man Committee shall be constituted duly headed by Thiru M.A.Siddique, I.A.S., Secretary to Government (Expenditure), Finance Department.

4) The following are the terms of reference of the Committee:-

(i) Representations on pay anomalies, pay revision consequent on the implementation of the revised pay levels or clarification in the method of fixation of pay in the revised pay structure or other allied benefits including Special Pay, Allowances, etc., shall be examined by the One Man Committee.

(ii) The Committee shall examine all the representations received by it and make specific recommendations to the Government on the representations / anomalies considered by the Committee.

(iii) The Committee shall submit its report to Government by 31.07.2018.

5) All Departments of Secretariat and Heads of Departments are requested to furnish the details if any called for by the One Man Committee immediately.

6) As regards supporting staff to the One Man Committee, orders will be issued separately.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K. SHANMUGAM,**

**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT.**

## ஓர் அன்பான வேண்டுகோள்

நூற்றாண்டு கடந்து கம்பீரமாக செயல்படும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் உறுப்பினராக இருந்து உதவிய அன்பு சகோதர சகோதரிகளுக்கு,

வணக்கம் பல. தாங்களும் தங்கள் குடும்பத்தினர்களும் உடல்நலம் நீண்ட ஆயுள், நிறைசெல்வம், உயர் புகழ், மெய்ஞானம் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். தமிழ்நாடு ஓய்வு பெற்ற பட்டயப் பொறியாளர் சங்கம் என்ற ஒன்று 1997-ல் நமது மூத்தப் பொறியாளர் இரா.வெங்கடசுப்பு அவர்களின் முயற்சியினாலும் மற்றும் சில மூத்தப் பொறியாளர்களின் ஒத்துழைப்பினாலும் துவங்கப்பட்டது. பின்னர் அச்சங்கத்தின் பொறுப்பாளர்களை தமிழ்நாடு பட்டயப் பொறியாளர் பேரவையில் இருந்து விலக்கினார்கள். தமிழ்நாடு பொறியியல் சங்க நூற்றாண்டு விழாவிற்கு சுமார் ரூ.8$^{1/2}$ இலட்சத்தினை தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு கொடுக்கவில்லை. தவிர நூற்றாண்டு விழாவிற்கு யாரும் போகக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியதுடன் தமிழ்நாடு பொறியியல் சங்க கட்டடங்களில் இனி கூட்டம் நடத்த வேண்டாம் என்றும் முடிவு செய்து வெளியேறிவிட்டனர். சில கசப்பான உணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் மூத்த பொறியாளர் தியாகச் செம்மலை இழிவு படுத்தியும் கடிதங்கள் அவர்களால் எழுதப்பட்டன. ஏராளமான இன்னல்கள் செய்தாலும் நமது சங்கத்தின் பொதுச்செயலாளர் அவர்கள் முத்தாய்ப்பாக "உங்களுக்கு நிறைய நேரமுள்ளது. எங்களுக்கு நிறைய வேலையுள்ளது" என்று பதில் கடிதம்

எழுதிவிட்டார். முக்கியமாக உறுப்பினராக உள்ள ஒருவர் இயற்கை அடைந்து விட்டால் அவரது துணையை FORDET உறுப்பினராக சேர்க்கக்கூடாது என்ற முடிவில் அவர்கள் உறுதியாக நிற்கின்றார்கள்.

ஆகவே காலமான நமது சகோதரப் பொறியாளர்களின் மனைவிமார்களை சங்கத்தில் சேர்த்து அவர்களுக்கு அரசு வழங்கும் அனேக சலுகைகளைச் சங்கம் பெற்றுத்தர வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு பொறியியல் சங்கத்துடன் நல்ல புரிந்துணர்வோடு ஒத்துழைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் சென்னையை தலைமையிடமாக கொண்டு 15.09.2013 ல் "REAT" Retired Engineer's Association Tamil Nadu" எனற சங்கத்தை பொறியாளர்கள் இரா.வெங்கடசுப்பு, சி.ப.சண்முகம், என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஊர்க்காவலன், என்.கணேசபிரகாஷ், என்.வெங்கட்ராமன் பொன்றவர்களுடன் இச்சங்கம் துவங்கப்பட்டது. இதன் கிளைகள் சென்னை, சேலம், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை ஆகிய நகரங்களில் துவங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களின் குறைகளை கேட்டு அவைகளை களையவே மைய அமைப்பில் ஒரு புதிய பொறுப்பாளர் "ஓய்வூதியர் குறைதீர்க்கும் செயலர்" என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது. ஏராளமான விதவிதமான, கோரிக்கைகள் பெறப்பட்டு அவைகளுக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் படி பல கடிதங்கள் எழுதியும், நேரில் சம்பந்ததப்பட்ட அலுவலர்களை சந்தித்தும், வேண்டிய நல்ல பயன்கள் பெறப்பட்டன. அவைகளை பட்டியல் இட்டால் பல பக்கங்கள் வரும்.

ஆகவே பொதுப்பணித்துறையில் பணி செய்து நிறைவு பெற்றவர்கள் இதுவரையில் சேராமல் இருந்தாலும் அவர்களைச் சேர்ப்பதுடன் தாங்களும் "REAT" ல் உறுப்பினராகி சங்கத்தைப் பலப்படுத்தி பயனடையுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கனிவு மிக்க மரியாதையுடன்,

தங்கள் நம்பிக்கையுள்ள,

(ம.பலராமன்)

ஓய்வூதியர் குறைதீர்க்கும் செயலர் REAT
சேலம் - 636 007. Cell: 94863 40416

## இரங்கல்


தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை துணைத் தலைவர் பொறியாளர் N.முருகேசன் உதவிப் பொறியாளர் அவர்களின் மனைவியார் திருமதி. M.காஞ்சனா அவர்கள் 19.02.2018 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் P.S.இராஜமாணிக்கம் இளம் பொறியாளர் அவர்களின் தகப்பனார் திரு.P.சண்முகம் அவர்கள் 27.01.2018 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்



Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**MARCH 2018**

# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Posted on**
**09.03.2018**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,